Judicial Form No. 53
[See Rule 42]
DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
.............
IN THE COURT OF JUDICIAL MAGISTRATE,PAPPIREDDIPATTI

| | |
|---|---|
| Calendar<br>Misscellancous<br>Preliminary Register<br>Sessions | **Case No. DV.No. 01/2020** |
| Deposition of PW1 | Prosecution<br>Defence<br>Court |
| Name | : திருமதி. வெண்ணரசி |
| Father's Name/Husband Name | : க/பெ. மாதேஸ்வரன் |
| Village | : பாப்பிரெட்டிப்பட்டி |
| Taluk | : பாப்பிரெட்டிப்பட்டி |
| District | : தருமபுரி |
| Caste | : |
| Calling | : PW1 |
| Religion | : இந்து |
| Age | : 34 |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the **11th** Day of **March 2022.**

திருமதி. வெண்ணரசி

**எதிர் மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை**

எனது கணவர் வேறு திருமணம் செய்து கொண்டதால் எனக்கும் எனது

ECOURT COPY

E-COURTCOPY

மகனுக்கும் பண நிவாரணம் கேட்டு இந்த மனுவை தாக்கல் செய்துள்ளேன். எப்போது எனது கணவர் திருமணம் செய்து கொண்டார் என்று எனக்கு தெரியாது. கடந்த 23.10.2019 ம் தேதி எனது கணவர் குடியிருக்கும் கருமந்துறை கிராமத்திற்கு சென்று அவரது வீட்டில் பார்த்தபோது 2 குழந்தைகளுடனும், 2 வது மனைவியுடனும் வாழ்ந்து வருவதை பார்த்தேன். என் கணவரை விட்டு பிரிந்து 10 வருடங்கள் ஆகிறது. எனது கணவரை விட்டு பிரிந்த பிறகு 10 முறை கருமந்துறை சென்றிருப்பேன். நான் போகும்போது பெரும்பான்மையாக எனது மாமனார் மாமியார் மட்டும் தான் இருப்பார்கள். எனது கணவரை கேட்டால் ஊரில் இல்லை என்று சொல்வார்கள். எனது கணவருடன் சேர்ந்து வாழும் முயற்சியில் நான் கருமந்துறை சென்று வந்தேன். நான் எனது அப்பா மற்றும் எனது மகன் 3 பேரும் கருமந்துறை செல்வோம். கருமந்துறை ஊர் பெரியவர்களை வைத்து சமாதானம் செய்தோம்.

அந்த சமாதானத்திற்கு எனது கணவர் வரவில்லை. எங்கு இருக்கிறார் என்று தெரியாது என்று சொல்லிவிட்டார்கள். எனது மாமனார் மாமியாரை வைத்து தான் சமாதானம் பேசினோம். என் மாமனாரை கேட்டால் அவன் இல்லை அவனை கண்டுபிடித்து பேசிக் கொள் என்று சொல்வார். கருமந்துறை 10 முறை பேச்சுவார்த்தைக்கு போகும்போது 1 முறை கூட எனது கணவரை நான் பார்க்கவில்லை. என் கணவர் உஷா டெக்ஸ்டைலில் தறி ஓட்டும் தொழிலாளராக வேலை செய்து வந்தார். தற்போது கோயமுத்தூரில் வேலை செய்து வருவதாக சொன்னார். அதன் பிறகு 23.10.2019 முன்னர் நான் எனது கணவரை பார்க்கவில்லை. கருமந்துறையில் உள்ள எனது கணவர் வீட்டில் வைத்து தான் பார்த்தேன். என்

கணவரை கேட்டதற்கு தனக்கு திருமணம் ஆகி விட்டதாகவும், 2 குழந்தைகள் இருப்பதாகவும், சொன்னார். அப்பொழுது ஊர்காரர்கள் இருந்தார்கள். என் அப்பா மற்றும் என் மகன் ஆகியோர் இருந்தார்கள். ஊர் தலைவர் ஆண்டி மற்றொரு ஆண்டி மற்றும் ஊர்காரர்கள் இருந்தார்கள். சுமார் 10 நபர்கள் இருந்திருப்பார்கள். ஊர் தலைவர் கருமந்துறையை சேர்ந்தவர். எனது கணவர் 2 வது திருமணம் செய்து கொண்டது தொடர்பாக கருமந்துறை காவல் நிலையத்தில் புகார் அளித்து வழக்கு பதிவு செய்துள்ளனர். வழக்கு எண் எனக்கு தெரியாது. புகார் சம்மந்தமாக 4 முறை விசாரணை செய்தார்கள். கருமந்துறை காவல் நிலையத்திலிருந்து சமூக நல அலுவலர்களுக்கு அனுப்பி வைத்தனர்.

**மேற்படி சாட்சியம் என் முன்னிலையில் திறந்த நீதிமன்றத்தில் விசாரணை செய்யப்பட்டு, பதிவு செய்யப்பட்ட சாட்சியம் சாட்சிக்கு படித்துக்காட்டி அவர் சரி என ஒப்புக்கொண்டு என் முன்னர் கையொப்பம் செய்தார்.**

**நீதித்துறை நடுவர் பாப்பிரெட்டிபட்டி (மு.கூ.பொ).**

E-COURT COPY